□□□□ □□□□□□□□□□ □□□□□□ □□□ □□□□□□ □□□□□□□□□□□□?

கடவுளை உண்டாக்கியவன் மூட்டாள்;
பரப்பியவன் அயோக்கியன்;
வணங்குகிறவன் காட்டுமிராண்டி -

என்று நான் கூறிவருவது கண்டு பார்ப்பனர் நெருப்பின் மீது நிற்பது போல் துள்ளுகிறார்கள், துள்ளிக் குதிக்கின்றார்கள். அப்பாவிகளையும், கூலிகளையும் பிடித்து நம்மீது ஏவி விடுகிறார்கள். பெரும், பெரும் போராட்டங்கள் நடத்தப்போவதாகப் பூச்சாண்டி காட்டுகிறார்கள். இதை நான் வரவேற்கின்றேன்; எதிர்பார்க்கின்றேன்; போராட்டம் தூவங்கினால் எனது மேற்கண்ட பிரசார வலைகைக்கு உதவியாகும் என்பதோடு மலேும் இத்தொண்டு சயெ்ய உற்சாகமூட்டி ஊக்கமளிக்கும் என்று கருதுவது தான். கடவுளை உண்டாக்கியவன் மூட்டாள் என்பதற்காகக் போித்துக் கொள்ளும் சிகாமணிகளே! நான் கடவுளை "உண்டாக்கியவன் மூட்டாள்" என்றால் எதற்காக நீங்கள் போித்துக் கொள்ளவேண்டும்? உண்டாக்கியவன் மூட்டாள் என்றால் உண்டாக்கியவன் யார்? அச்சொல் யாரைக் குறிக்கிறது? போிக்கிறவனே நீ கடவுள் உண்டாக்கப்பட்டது என்பதை ஒப்புக் கொள்கிறாயா? கடவுளை உண்டாக்கியவன் ஒருவன் இருக்கிறான் என்பதை ஒப்புக் கொள்கிறாயா? உனது மூட்டாள்தனத்தைக் காட்டத்தான் போிக்கிறாய். ஆத்திரப்படுகிறாய். நிற்க, உன் ஆத்திரத்திற்குக் காரணம், ஆதாரம் என்ன?

மூண்டமே! நீ நினைக்கும் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்கிறாயா? அல்லது, அது ஒருவனால் கண்டுபிடிக்கப்பட்டது என்கிறாயா? அல்லது, கடவுள் யாராலும் உண்டாக்கப்படாமல், யாராலும் கண்டு பிடிக்கப்படாமல் தானாக, இயற்கையாக, கடவுள் இஷ்டப்படி கடவுளே தோன்றிற்று என்கிறாயா? நான் சொல்வதில் உனக்கு ஆத்திரம், கோபம் வருவதாயிருந்தால், எதற்காக வரும்? நான் சொல்வதைக் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்று நீ கருதினால்தானே உண்டாக்கியவனை நான் மூட்டாள் என்கிறனே் என்று நீ கோபிக்க வேண்டும்! மற்றும், கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்று கருதுகிறவனுக்குத்தானே கோபம், ஆத்திரம் வர வேண்டும்! நீ கோபிப்பதால் கடவுள் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் என்று தானே அர்த்தம்! அது மாத்திரமல்லாமல், நீ கோபிப்பதால் கடவுளையும் அவமதிக்கிறாய் என்று தானே கருத்தாகிறது!

இப்படேதான் நீ நினைத்தப்பார்! கடவுள் உண்டாக்கப்பட்டதா! (கிரியஷேனா? (Creation) அல்லதான் கடவுள் கண்டுபிடிக்கப்பட்டதா? (இன்வனெஷனா? (Invention) அல்லதான் கடவுள் இயற்கையாய்த் தோன்றினதா? நசேச்சரா? (Nature) இதை முதலில் முடிவான சொல்லுகிறேன். நான் சொல்வதன் கருத்தான கடவுள் கண்டு பிடிக்கப்பட்டதுமல்ல. தானாகத் தோன்றியதுமல்ல, முட்டாளால் உண்டாக்கப்பட்டதான என்பதாகும். அதை அதாவதான கடவுளை ஓரு மனிதன் உண்டாக்கினான். என்பதாக நீ நினைத்தாலோ அல்லதான் அதை நீ ஒப்புக் கொண்டதாலோ தானே கடவுளை உண்டாக்கியவன் முட்டாள் என்றால் நீ கோபித்துக் கொள்ள வேண்டும்! நீ இருப்பதாகக் கருதிக் கொண்டிருக்கும் கடவுள் ஓருவராலும் உண்டாக்கப்பட்டதல்ல. "தானாக சுயம்பூவாகத் தோன்றியிருக்கிறது" என்பதான் தான் இன்று கடவுள் நம்பிக்கைகாரர்களின் கருத்தான ஆக இருக்கிறது.

ஆகையால் நான் கடவுளை உண்டாக்கியவனை முட்டாள் என்பதோடு அதற்காகக் கோபிப்பவனை இரட்டை முட்டாள் என்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இப்படி நான் சொல்வதால், கடவுளால் எவன் பெரிய ஜாதியாய் இருக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறானோ, அவனுக்கும் கடவுள் பேரால் பொறுக்கித் தின்ன வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கிறவனுக்கும், கடவுளால் தனது அயோக்கியத்தனங்களை மறைத்துக் கொள்ள வேண்டியவனுக்கும் தாம் கோபம் வரவேண்டும். அதை நான் சமாளித்துக் கொள்கிறேன்.

(தந்தை பெரியார் - "உண்மை" 14.-03-1970)

"□□□□□□□□□ □□□□□□□□□□□□□ □□□□□□□□□□□□"

"கடவுளை பரப்புகிறவன் அயோக்கியன்" என்பதற்கு இவ்விளக்கம் எழுதப்படுகிறது. கடவுளை பரப்புகிறவன் எவனுமே "கடவுள் தத்துவத்திற்கு" ஏற்பக் கடவுளைக் கற்பித்துக் கொண்டு பரப்புகிறவன், அல்லது பிரசாரம் செய்பவன், அல்லது கற்பித்துக்கொள்பவன், அல்லது கடவுளுக்காகவென்று கதைகள் புராணங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் எழுதினவன்கள் மற்றும் அதற்கு ஆகக்கோவில்கள் கட்டி அவற்றுள் உருவங்கள் வதைத்தவன்கள், கடவுளுக்காகவென்று பூசைகள் உற்சவங்கள் பண்டிகைகள் முதலியவைகளை நடத்துகிறவன்கள், செய்கிறவன்கள் யாவருமே நாணயத்தையே, யோக்கியத்தையே, ஒழுக்கத்தையே ஆதாரமாக வதைத்துக் கடவுளை பரப்புவதில்லை, நடத்துவது இல்லை.

"கடவுளுக்கு உருவமில்லை கூணமில்லை" என்று ஆரம்பித்துக் "கடவுள் சர்வவல்லமையுடையவர், சர்வத்தையும் அறியக்கூடிய சக்தி (சர்வஞ்ஞத்துவம்) கொண்டவர்," "கருணையே வடிவானவர்," "அன்பு மயமானவர்," "அவரின்றி அணுவும் அசையாது" என்பன போன்ற கடவுளின் எல்லாக் குணங்களையும், சக்திகளையும், தன்மைகளையும் அடுக்கடுக்காகக் கடவுளுக்குக் கற்பித்து மக்களை நம்பச் செய்விட்டு இந்தக் குணங்களுக்கும் தன்மைக்கும் மாறான குணங்களை, தன்மைகளை அதற்கு ஏற்றி அதற்காகக் கோவில்கள் கட்டியும், உருவங்கள் உண்டாக்கி வதைத்தும், நடவடிக்கைகளை ஏற்றியும், அவைகளை ஆதாரமாய்க் கொண்டு பூசை, உற்சவம், பண்டிகை முதலியவைகளைக் கொண்டாடச் செய்வதன் மூலம் கடவுளைப் பரப்புவதுனென்றால் இக்காரிய மூயற்சியில் ஈடுபட்ட மக்கள் அயோக்கியர்களா அல்லவா என்று சிந்தித்துப் பார்க்கும்படி கேட்கிறேன்.

இக்கூட்டத்தார் மக்களை ஏய்க்க வல்லாமல் வேறு எக்காரியத்திற்காக இக்காரியங்களில் ஈடுபடுகிறார்கள், ஈடுபடவேண்டியவர்களானார்கள் என்று சொல்ல முடியுமா? இவர்கள் தங்கள் சுயநலத்திற்காக, தங்கள் பிழைப்பிற்காக இக்காரியங்களைச் செய்யும் அயோக்கியர்களாக மூடர்களாக இருந்து வருகிறார்கள் என்பதல்லாமல் வேறு கருத்து, காரணம் என்ன சொல்ல முடியும்? இன்று இந்தப்படியான அயோக்கியர்களால் பரப்பப்படுகிற்க்கும் எந்தக் கடவுளை எடுத்துக் கொண்டாலும் அதற்கு வீடு, உணவு, பெண்டாட்டி, வைப்பாட்டி, கூழந்தை கூட்டிகள், நககைகள், சொத்துக்கள், கல்யாணம், உற்சவம், ஊர்வலம் முதலியவை செய்து கூட்டத்தை கூட்டி ஆயிரம், பல ஆயிரம், இலட்சம், பல லட்சம், ரூபாய்கள் சேலைவு ஏற்படும்படியும் அதுபோலவே மக்களுக்கும் நாள் கணக்கில் மனெக்கடோ ஏற்படும்படியும் செய்வதோடு

களேபிக்கணக்கான மக்களை இழிசாதி மக்கள்களாகவும் இருக்கும்படி சயெ்கின்றனர். " அன்பும் கருணையும், ஒழுக்கமும் உள்ள கடவுள்கள்" யுத்தம் சயெ்ததாகவும் களேபிக்கணக்கான, மக்களை ஆண்களை, பணெ்களை கொன்று குவித்ததாகவும், வடெ்பி வீ ழ்த்திச் சித்திரவதை சயெ்தா நாசமாக்கியதாகவும் விபசாரம் சயெ்ததாகவும், நடப்பில் நடத்திக் காட்டிப் பரப்புவதனெ்றால் இப்படிப் பரப்புகிறவர்கள் அயளேக்கியர்களா அல்லவா என்று மறுபடியும் கடேபதளேடு இதற்கு இரையாகிறவர்களை மூட்டாள்களாக மானமற்றவர்களாக ஆக்குகிறார்கள் அல்லவா என்று திரும்பவும் கடேகிறனே்.

இப்படிக் கடவுளைப் பரப்பும் அயளேக்கியர்களால் எத்தனை எத்தனை களேபி மக்கள் மடையைர்களாகிறார்கள் என்பதை அறிவாளிகள் முதலில் சிந்திக்க வணேடும். சாதாரணமாக இந்தியாவை எடுத்துக்கொண்டால் சிறப்பாக இந்துக்களை எடுத்துக்கொண்டால் சுமார் 40 -களேபி மக்களும் இந்த விஞ்ஞான காலத்தில் டாக்டர் எம்.ஏ. பி.ஏ. படித்த மக்களும், பலவர்கள், வித்வான்கள், மகாமதோவிகள் என்று க□றப்படும், க□றிக்கொள்ளும் மக்களும் இக்காரியங்களில் பரம மூட்டாள்களாக இருப்பதற்குக் கடவுளைப் பரப்பினவர்களும், பரப்பிவருபவர்களும் இப்படிப்பட்ட கடவுள் கதை எழுதினவர்களும் இந்தக் கடவுள்களுக்குக் களேவில் கட்டி உருவம், உற்சவம், நடப்பு தரே், திருவிழா நடத்தும் அயளேக்கியர்களுமல்லாமல் வறேு யாராய் இருக்க முடியும்? இந்த மடையைர்கள் எவ்வளவு தூணிவளேடு ஆண், பணெ் கடவுள்களைக் கற்பித்து அவற்றிற்கு விபசாரத் தன்மகைளை (ஒழுக்க ஈனங்களை)க் கற்பித்துப் பரப்புகிறார்கள்! என்றால் இவர்களை எத்தனை முறை அயளேக்கியர்கள் என்று க□றவணேடும்! என்பதை வாசகர்களே தீ ர்மானித்துக் கொள்ள விட்டு விடுகிறனே். இப்படி நான் எழுதுவதில் சிலர் மனம் பூண்படாதா? என்று கடேகலாம்.

அயளேக்கியர்கள் மனம், மடையைர்கள் மனம் பூண்படுமே என்று பார்த்தால் ஓரு சிலரால் மூட்டாள்களாக ஆக்கப்பட்ட களேபிக்கணக்கான மக்களை அறிவாளிகளாக ஆக்க வறேு வழி யாராவது சொல்லட்டுமே பார்க்கலாம்! " களேவில்கள் கள்ளர் குகை" என்று க□றிய கிறிஸ்து கொல்லப்பட்டாலும் இன்று அவரை ந□ற்றுக்கணக்கான களேபிமக்கள் "கடவுளுக்கு" மலோகக் கருதுகிறார்கள்.

" கடவுளுக்கு உருவம் கற்பித்து வணங்குகிறவர்கள் மூடர்காள்கள் மடையர்கள்" என்று கூறிய மூகம்மது நபியசை் சிலர் தூன்பூறுத்தினார்கள் என்றாலும் இன்று அவரபை் பல பத்துக்களோடி மக்கள் கடவுளவைிட மலோக கருதுகிறார்கள், இவ்வளவு ஏன்?

நம் கண் முன்னால் " களோவில்கள் கூச்சுக்காரிகள் விடுதி" என்று கூறிய காந்தியை இன்று பார்ப்பனர் உட்பட ஏராளமான மக்கள் மகாத்மா என்கிறார்கள். உயிருக்குத் தூணிந்து உண்மயைை எடுத்துக்கூற மக்கள் இல்லாததால் இன்று நம் நாட்டில் இவ்வளவு மூடர்காள்களும், அயலோக்கியர்களும், காட்டுமிராண்டிகளும் தலோன்றி இந்த விஞ்ஞான காலத்திலும் இருந்து வர இடம் ஏற்படட்தே தவிர வறேு காரணம் என்ன? சிந்தியுங்கள் மற்றும் இந்தப்படியான நம்மை உலகம் - அறிவுலகம் எப்படிப்பட்டவர்கள் என்று கருதும் என்பதயைும் சிந்தியுங்கள். எவ்வளவோ பறொுமகைக்கு மலேதான் இந்த விளக்கத்திற்கு வந்திருக்கிறனே்.

(தந்தை பரியார் - "உண்மை" 14-04-1970)

"கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி"

"நான் சறொன்னால் உனக்கு ஏன் களோபம் வரவணே்டும்" என்ற தலபை்பில் "உண்மை" ம□ன்றாவது இதழ் முதல் கட்டுரயைில் "கடவுளகை் கற்பித்தவன் மூடர்காள்" என்ற கருத்திற்கு விளக்கமும், நான்காவது இதழ் இரண்டாவது கட்டுரயைில் "கடவுளபை் பரப்பினவன் அயலோக்கியன்" என்ற கருத்திற்கு விளக்கமும் எழுதியிருந்தனே் . இந்த ம□ன்றாவது கட்டுரயைில் "கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி" என்ற கருத்திற்கு விளக்கம் எழுதப்படுகிறனே். பறொுவாகச் சறொல்கிறனே், உலகிலயேே கடவுளை வணங்குகிற எவனும் கடவுள் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது? அதன் தன்மை என்ன? குணம் என்ன? என்பனவாகிய விஷயங்களை உணர்ந்தே,

அல்லது உணர்ந்ததன் படியே வணங்குவதே இல்லை; மற்றபெய்படியனென்றால் "கடவுளை" மனிதனாகவே கருதிக்கொண்டு மனிதகுணங்களையே அதற்கு ஏற்றிக்கொண்டு, தான் எப்படி நடந்து கொண்டான், தான் எப்படி நடந்து கொள்ளுகிறான், தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் தான் நடந்து கொண்ட க□டாத்தன்மைகளுக்கு ப் பரிகாரம் (பாவ மன்னிப்பு) தேடும் முறையிலும், நியாயமே, பொருத்தமே, விகிதமே இல்லாமல் தனக்கு வாழ்வில் எல்லாத் துறைகளிலும் உயர் நிலையே வேண்டுமென்கின்ற பரோசயுடனுந்தாம் கடவுளை வணங்குகிறான். இப்படிப்பட்டவனை அயோக்கியன் என்று சொல்லாவிட்டாலும் அறிவாளி என்று சொல்ல முடியுமா?

இப்படிப்பட்ட இவர்கள் வணங்கும் கடவுளை, இவர்களை, இன்றைய நம் ஜனநாயக ஆட்சிக்கும், ஆட்சிப் பிரஜைகளுக்கும், பிரதிநிதிகளுக்கும் ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமே ஒழிய யோக்கியர்கள், அறிவாளிகள் என்று எப்படிச் சொல்லமுடியும்? இம்மாதிரியான கடவுள் வணக்கம் உலகில் ஏற்பட்டபின் இதன் பயனாக இயற்கையான யோக்கியமான மனிதன் என்று சொல்லக்□டிய ஒரு மனிதனாவது தோன்ற முடிந்ததா? இருக்க முடிந்ததா? பொதுமக்கள் பயமில்லாமல் வாழமுடிந்ததா? அல்லது கடவுள்களே, கடவுள்கள் வீ ட்டுவாசல் சொத்துக்களாவது மக்கள் பயமில்லாமல் வாழமுடிந்ததா? இது பொது விளக்கமாகும்.

இனி நமது மக்கள் கடவுளை வணங்குவதன் □லம் எவ்வளவு காட்டுமிராண்டிகள், மடையர்கள் என்பதைப் பற்றி விளக்குகிறேன். நான் பந்தயம் கட்டிச் சொல்லுவேன், நம் மக்களில் (இந்துக்கள் என்பவர்களில்) கடவுளை வணங்குகிறவர்களில் ஒருவர்க□ட அறிவாளரே, யோக்கியரே, உண்மை அறிந்தவரே இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!! என்று க□றுவேன். ஏனெனில் எப்படிப்பட்ட கடவுள் பக்தனும் கடவுள் என்று கல்லைத்தான், மனித உருவத்தைத்தான், மாடு, குரங்கு, மீ ன், ஆமை, பன்றி, கழுகு, யானை முதலிய உருவங்கள் கொண்ட கல்லைத்தான் வணங்குகிறான். அவற்றிலும், மிகமிக முட்டாள்தனமாக வணங்கப்படும் பேக்கு என்னவென்றால் ஒருதலை, இரண்டு தலை, □ன்று தலை, நான்கு தலை, அய்ந்து தலை, ஆறுதலை, ஆயிரம் தலையும் அவைபோன்ற கைகளும் உடையை மனித உருவங்களையும், மற்றும் தலை மனிதன், உடல், மிருகம், முதலிய உருவங்கள் கொண்டவைகளையும் வணங்குகின்றான் என்பதே.

கடவுள் இருப்பதற்கு இப்படிப்பட்ட தேறுற்றங்கள் எங்கு இருக்கின்றன? ஓவ்வொரு அயேக்கியனும், ஓவ்வொரு க□ற்றகை் கற்பித்தால், பலப்பல மூட்டாள்கள் இதை ஏற்பது என்றால், இதை வணங்குவது என்றால் இது மூட்டாள் காட்டுமிராண்டித்தனமா அல்லவா என்று தான் கேட்கிறேன். மற்றும் கடவுள்களுக்குப் பெண்டாட்டி, பிள்ளை, வைப்பாட்டி முதலியவகைளுடன் ப□சை செய்து வணங்குவது முதலிய காரியங்களும், கடவுள் மற்றவன் (மனிதனின்) மனைவியகை் கடெுத்தான், மற்றவனகை் கொன்றான், மற்றவனை ஏய்த்து மோசம் பண்ணினான், திருடினான், பதினாயிரம் பெண்டாட்டி, பதினாயிரம் காதல் என்றெல்லாம் கதை கட்டி, அததை் திருவிழாவாக்கி வணங்குவதும் காட்டுமிராண்டித்தனமா? அறிவுடமையைா? என்று கேட்கிறேன். மற்றும் பலர் ஓரு வேளை உணவுக்கும் திண்டாட, தலகை்கு எண்ணெய் இல்லாமல் வருந்த, தினம் அய்ந்து வேளை, ஆறுவேளை பொங்கல் அக்கார வடிசில் முதலியன படதை்தல், பால், நெய், தேன், தயிர், இளநீ ர், எண்ணெய், அபிஷகேம் என்னும் பெயரால் கல்லுகளின் தலையில் கொட்டிச் சாக்கடகை்கு அனுப்புதல் வடிகட்டிய மூட்டாள்தனமா? கடவுள் வணக்கமா? என்று அழுத்திக் கேட்கிறேன். இவற்றால், இந்த மூட்டாள் தனமான கடவுள் வணக்கத்தால் நலம் பார்ப்பனர்க்கு அல்லாமல் (மற்ற யாருக்கும் மூட்டாள் பட்டம் அல்லாமல்) பயன் உண்டா? என்று கேட்கின்றேன். மலேும் இதற்காக ஏற்படும் பொருள் செலவு , நரேச் செலவு எவ்வளவு? இந்த நிலை ஓருபுறமிருந்தாலும் நம் மக்கள் இப்படியே பேய்க் கொண்டிருந்தால் நமது பின் சந்ததிகளின் நிலை என்ன ஆவது? என்று கேட்டு இதை மூடிக்கிறேன்.

(தந்தை பெரியார் - உண்மை 14-05-1970)

http://periyarvizippunarvuiyakkam.blogspot.com/2008/07/blog-post_05.html